RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 123 | மே.9, 2025 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பிளஸ் 2 தேர்வு முடிவுகள் வெளியீடு: 95.03% மாணவர்கள் தேர்ச்சி!

சென்னை, மே.9-

பிளஸ் 2 பொதுத்தேர்வு முடிவுகளை நேற்று (மே 8) காலை 9 மணிக்கு பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார். அதில், மொத்தம் 95.03% மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் வழக்கம்போல் மாணவிகள் தேர்ச்சி விகிதம் அதிகம். அதன்படி மாணவிகள்: 96.70 %, மாணவர்கள்: 93.16 % தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டு மொத்த தேர்ச்சி விகிதம் 94.56% என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் பிளஸ் 2 மாணவர்களுக்கான பொதுத் தேர்வுகள் மார்ச் 3ம் தேதி தொடங்கி 25ம் தேதி நிறைவடைந்தது. இந்நிலையில், தமிழ்நாடு முழுவதும் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளுக்ளுக்கான தேர்வு முடிவுகள் இன்று காலை 9.00 மணியளவில் வெளியானது.

மாணவர்கள் தங்களின் மதிப்பெண் விபரங்களை, 'ஆன்லைன்' வழியில் தெரிந்து கொள்ளலாம். தேர்வு முடிவுகளை, https://results.digilocker.gov.in மற்றும் www.tnreuslts.nic.in ஆகிய இணையதளங்களில், தேர்வர்கள் தங்கள் பதிவெண் மற்றும்



பிறந்த தேதியை பயன்படுத்தி தெரிந்து கொள்ளலாம். பள்ளி மாணவர்கள் தாங்கள் பயின்ற பள்ளிகளிலும், தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

தேர்வு எழுதிய மாணவர்கள் அனைவரின் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கும், தேர்வு முடிவுகள் குறுஞ்செய்தியாக அனுப்பி வைக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கும் தேசிய தகவல் மையங்களிலும், அனைத்து மைய மற்றும் கிளை நூலகங்களிலும், கட்டணமின்றி தேர்வு முடிவுகளை அறிந்து கொள்ளலாம்.

தேர்வெழுதியோர் மொத்த எண்ணிக்கை : 7,92,494

மாணவியர்களின் எண்ணிக்கை : 4,19,316

மாணவர்களின் எண்ணிக்கை : 3,73,178

தேர்ச்சி விவரங்கள்:

தேர்ச்சி பெற்றவர்கள் : 7,53,142 (95.03%)

மாணவியர் 4,05,472 (96.70 %)

மாணவர்கள் 3,47,670 (93.16 %)

தேர்விற்கு வருகைப்புரியாதவர்கள்: 10,049

பள்ளிகள் மேலாண்மை வாரியான தேர்ச்சி சதவிகிதம்

அரசுப் பள்ளிகள் ரூ 91.94%

அரசு உதவி பெறும் பள்ளிகள் 95.71%

தனியார் சுயநிதிப் பள்ளிகள் 98.88%

பள்ளிகள் வகைபாடு வாரியான தேர்ச்சி சதவிகிதம்

இருபாலர் பள்ளிகள் ரூ 95.30%

பெண்கள் பள்ளிகள் ரூ 96.50%

ஆண்கள் பள்ளிகள் ரூ 90.14%

அரசு பள்ளி மாணாக்கர்களில் அதிக தேர்ச்சி விகிதம் பெற்ற முதல் 5 மாவட்டங்கள்

அரியலூர் ரூ 98.32%

ஈரோடு ரூ 96.88%

திருப்பூர் ரூ 95.64%

கன்னியாகுமரி ரூ 95.06%

கடலூர் ரூ 94.99%

ஜூன் 25ல் துணை தேர்வு: பிளஸ் 2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு 25.06.2025 முதல் துணை தேர்வு நடத்தப்படும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்துள்ளார்.

## தமிழக அமைச்சரவையில் இலாகா மாற்றம்

### அமைச்சர் துரைமுருகனுக்கு சட்டத்துறை ஒதுக்கீடு

சென்னை, மே.9-

தமிழக அமைச்சரவையில் இலாகாக்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. அதன்படி அமைச்சர் துரைமுருகனுக்கு சட்டத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் ரகுபதிக்கு கனிமம் மற்றும் சுரங்கத் துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அமைச்சரவையில் நீர்வளத்துறை மற்றும் கனிமம் மற்று சுரங்கத் துறை அமைச்சராக துரைமுருகனும், சட்டத்துறை அமைச்சராக எஸ்.ரகுபதியும் இருந்து வந்தனர். இந்நிலையில், அமைச்சரவையில் தற்போது மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



அமைச்சர் துரைமுருகனுக்கு தற்போது சட்டத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நீர்வளத்துறையுடன் சேர்த்து இனி சட்டத்துறையையும் அவர் கவனித்துக் கொள்வார். அதேநேரம், அமைச்சர் துரைமுருகன் வசமிருந்த கனிமம் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் ரகுபதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிந்துரைப்படி அமைச்சரவை இலாகா மாற்றத்துக்கு ஆளுநர் மாளிகை ஒப்புதல் அளித்துள்ளது.

அண்மையில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் கலால் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி மற்றும் வனத்துறை அமைச்சர் கே.பொன்முடி ஆகியோரின் ராஜினாமாவைத் தொடர்ந்து தற்போது மீண்டும் தமிழக அமைச்சரவையில் இலாகா மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## 'தேர்வு வெற்றி மட்டுமே வாழ்வின் எல்லாவற்றையும் முடிவு செய்திடாது'

### மாணவர்களுக்கு விஜய் உத்வேகம்

சென்னை, மே.9-

தவெக தலைவர் விஜய் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ள தம்பி, தங்கைகளுக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பொதுத்தேர்வு தேர்ச்சி மட்டுமே வாழ்வின் எல்லாவற்றையும் முடிவு செய்திடாது என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். எனவே மனம் தளராமல் கடின உழைப்பை மீண்டும் முதலீடாக்கி புதிய இலக்கை நோக்கிச் செல்ல அனைவருமே தயார் ஆகுங்கள். வெற்றி காணுங்கள்.

வாழ்வின் அடுத்த நிலைக்குச் செல்லும் நீங்கள், தேர்ந்தெடுக்கும் துறைகளில் பற்பல சாதனைகள் புரிந்து, தலைசிறந்து விளங்கிட வாழ்த்துகிறேன். விரைவில் சந்திப்போம், வெற்றி நிச்சயம்" என்று அவர் கூறியுள்ளார்.

## தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த திமுக!

சென்னை, மே.9-

தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் 25 ஆண்டுகளை திமுக நிறைவு செய்துள்ளது.

தமிழகத்தில் திமுக முதன்முதலில் 1967 மார்ச் 6ம் தேதி ஆட்சியை பிடித்தது. அப்போது முதல்வராக அண்ணா, ஆட்சிப் பொறுப்பேற்ற 2 ஆண்டுகளில் உடல் நலக்குறைவால் 1969 பிப். 3ம் தேதி காலமானார். அதன் பின், இடைக்கால முதல்வராக நெடுஞ்செழியன் ஒரு வாரத்துக்கு பொறுப்பு வகித்த நிலையில், 1969ம் ஆண்டு பிப்.10ம் தேதி கருணாநிதி முதல்வராக பொறுப்பேற்றார். அதன்பின், திமுக அரசு 4 ஆண்டுகளை மட்டுமே நிறைவு செய்திருந்த நிலையில், ஓராண்டுக்கு முன்பாகவே 1971ம் ஆண்டு ஆட்சியை கலைத்துவிட்டு கருணாநிதி தேர்தலை சந்தித்தார்.

அப்போது நடைபெற்ற தேர்தலில் மீண்டும் திமுக வெற்றி பெற்று, கருணாநிதி முதல்வரானார். பின்னர், நாட்டில் அவசர நிலை பிரகடனம் அமலில் இருந்த போது, அதை திமுக கடுமையாக எதிர்த்தது. இதையடுத்து, 1976ம் ஆண்டு ஜன.31ம் தேதி திமுக ஆட்சி கலைக்கப்பட்டது.

அதன்பின், 13 ஆண்டுகளுக்கு பிறகு 1989ம் ஆண்டு திமுக மீண்டும் ஆட்சி பொறுப்புக்கு வந்தது. ஆனால், அடுத்த இரு ஆண்டுகளில் 1991 ஜன.30ம் தேதி திமுக ஆட்சி 2வது முறையாக கலைக்கப்பட்டது. அதன் பிறகு 1996, 2006ம் ஆண்டுகளில் இரு முறை ஆட்சி பொறுப்புக்கு வந்த திமுக முழுமையாக 5 ஆண்டுகளை நிறைவு செய்தது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் 2021ல் ஆட்சிப் பொறுப்பேற்ற திமுக, நேற்றுடன் 4 ஆண்டுகளை நிறைவு செய்து, 5ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இதையடுத்து, திமுக ஆட்சிப் பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இந்த 25 ஆண்டு ஆட்சி காலத்தில், 5 முறை முதல்வராக இருந்த கருணாநிதி, தமிழகத்தில் அதிக ஆண்டுகள்(19 ஆண்டுகள்) ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இதேபோல, 1977, 80, 84, 91, 2001, 2011, 2016 என 7 தேர்தல்களில் வெற்றி பெற்று அதிக ஆண்டுகள்(30 ஆண்டுகளுக்கு மேல்) ஆட்சி செய்த கட்சியாக அதிமுக விளங்குகிறது.

## 'நிர்வாகத் திறனற்ற ஸ்டாலின் மாடல் ஆட்சியின் செயலற்ற 4 ஆண்டுகள்' இபிஎஸ் விமர்சனம்

சென்னை: மே.9-

"4 ஆண்டு கால திமுக ஆட்சியை `ஸ்டாலின் மாடல் ஆட்சி' என்று ஆளுங்கட்சியினர் புகழ்ந்தாலும், பொதுமக்கள் நிர்வாகத் திறமையற்ற ஆட்சி என்றுதான் விமர்சிக்கின்றனர். இந்த ஆட்சியின் நான்கு ஆண்டுகளையும் செயலற்ற ஆண்டுகளாகவே அதிமுக உணர்கிறது." என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கடுமையாக விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி 2021 முதல் நான்கு ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. இந்த ஆட்சியை `ஸ்டாலின் மாடல் ஆட்சி' என்று ஆளுங்கட்சியினர் புகழ்ந்தாலும், பொதுமக்கள் நிர்வாகத் திறமையற்ற ஆட்சி, நிதிப் பற்றாக்குறை, கடன் வாங்குவதில் முதலிடம், சட்டம் ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருள் கேந்திரமாக மாறிய தமிழ் நாடு, தினசரி கொலைகள் ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை, கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.





'சிறு மழைக்கே பாதிப்பு' ஸ்டாலின் மாடல் ஆட்சியில், நிர்வாகத்தில் ஒருங்கிணைப்பு இல்லாததால், திட்டங்களை செயல்படுத்துவதில் தாமதம், உள்கட்டமைப்பு மேம்பாடு போன்றவை தாமதம் ஆகின்றன. உதாரணமாக, இந்த ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மழைநீர் வடிகால் பணிகள் 90 சதவீதம் முடிந்துவிட்டன என்றும், எவ்வளவு மழை பெய்தாலும் சென்னையில் ஒரு சொட்டு நீர்கூட தேங்காமல் வடியும் என்றும், முதலமைச்சர், சுகாதாரத் துறை அமைச்சர், நகராட்சித் துறை அமைச்சர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர், சென்னை மாநகராட்சி மேயர் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக பேட்டி அளித்தனர். ஆனால், 2021 மற்றும் 2022 ஆண்டில் பெய்த சிறு மழைக்கே சென்னை மக்கள் பாதிக்கப்பட்டதுதான் நிதர்சனமான உண்மை.

உள்ளாட்சித் தேர்தல்களில் வாக்குச் சாவடி முறைகேடுகள், மறு வாக்குப் பதிவு, அதிகாரிகள் மிரட்டப்படுதல் போன்றவை அனைத்து ஊடகங்களிலும் வெளிவந்தன.

'கவலைக்கிடமான நிதி நிலை' தமிழகத்தின் நிதி நிலைமை மிகவும் கவலைக்குரியதாக உள்ளது. மாநில அரசின் கடன் சுமை அதிகரித்துள்ளது. கடன் வாங்குவதில் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. மத்திய அரசிடமிருந்து நிதி பெறுவதில் தாமதம். உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீட்டில் குறைபாடு ஆகியவை மாநில வளர்ச்சியை பெரிதும் பாதித்துள்ளன. உதாரணமாக, கோயம்பேடு பேருந்து நிலையம் மாற்றம் சுமார் பத்து மாத காலம் சென்னை மக்களை கடும் துயரத்தில் ஆழ்த்தியதை அனைவரும் அறிவார்கள். சென்னை மட்டுமல்ல, வெளியூர்களில் இருந்து சென்னைக்கு வரும் மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மெட்ரோ திட்டங்கள் போன்றவை நிதி நெருக்கடியால் தடைபட்டன. அனைவருக்கும் மகளிர் உரிமைத் தொகை என்று வாய்ஜாலம் பேசிய ஸ்டாலின், அதில் 50 சதவீதம்கூட கொடுக்க முடியாதபடி பல நிபந்தனைகளை விதித்தார்.

சட்டம்ஒழுங்கு சீர்கேடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடு குறித்து கடுமையாக விமர்சித்து வருகின்றது. தொடர் கொலைகள், சாதி மோதல்கள், பாலியல் வன்கொடுமைகள், தனியாக வசிக்கும் முதியோர்கள் குறிவைத்துத் தாக்கப்படுதல், கொலை செய்யப்படுதல் போன்ற சட்ட விரோத சம்பவங்கள் அதிகரித்துள்ளன.காவல் துறையில் சீர்திருத்தங்கள் தேவை என்று ஸ்டாலின் கூறினாலும், குற்றங்களைத் தடுப்பதில் எந்தவித முன்னேற்றமும் இல்லை.

போதைப் பொருள் புழக்கம் அதிகம்! பெண்கள் பாதுகாப்பாக வாழ முடியாத மாநிலமாக, நகரமாக மாற்றியது தான் ஸ்டாலின் மாடல் திமுக அரசின் சாதனை. கடந்த நான்கு ஆண்டுகளாக, போதைப் பொருள் புழக்கம் மற்றும் பயன்பாடு தமிழகத்தில் பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. சென்னை, கோவை மற்றும் கடலோர மாவட்டங்களில் மெத்தபெட்டமைன், கஞ்சா போன்ற போதைப் பொருட்களின் புழக்கம் மற்றும் கடத்தல் அதிக அளவு அதிகரித்துள்ளது. குறிப்பாக, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், இளைஞர்களிடையே போதைப் பொருள் விற்பனை மிகவும் அதிகரித்துள்ளது. இவைகளைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்று இந்த அரசு வாய்ஜாலம் காட்டினாலும், அனைத்தும் ஏட்டளவிலேயே உள்ளது.

'அதிகரிக்கும் கள்ளச் சாராய மரணங்கள்' கொலைகள் மற்றும் வன்முறைகள் தமிழகத்தில் அதிகரித்த வண்ணம் உள்ளன. குறிப்பாக நான், சட்டம்ஒழுங்கு சீர்கேடு, கொலை, கொள்ளை, வழிப்பறி இவற்றைப் பற்றி சட்டமன்றத்திலும், அறிக்கைகள் வாயிலாகவும் பலமுறை எடுத்துக் கூறியும், இந்த அரசிடம் கடுமையான, உறுதியான நடவடிக்கைகள் எதுவும் இல்லை. குறிப்பாக, 13 ஆண்டுகளுக்குப் பிறகு கள்ளச் சாராய மரணம் இரண்டு முறை நிகழ்ந்தேறியதுதான் ஸ்டாலின் மாடல் அரசின் சாதனை.

இந்த அரசின் மீது வைத்த ஊழல் குற்றச்சாட்டுகளை, குறிப்பாக அமைச்சர் ஒருவரே அளித்த பேட்டிக்கு இதுவரை எந்தவிதமான மறுப்பையும் ஸ்டாலினால் அளிக்க முடியவில்லை. நான், பல்வேறு சந்தர்ப்பங்களில் ஸ்டாலின் மாடல் அரசின் தவறுகளையும், குறைபாடுகளையும் சுட்டிக்காட்டியும், அந்தத் தவறுகளை திருத்திக்கொள்ளக்கூடிய மனப் பக்குவம் இல்லாத நிலையில்தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது.

இந்த நான்காண்டு கால ஆட்சியில், அதிமுக காலத்தில் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத் திட்டங்கள் குறிப்பாக, அத்திக்கடவுஅவினாசி திட்டம், மெட்ரோ ரயில் திட்டம், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம், 50 ஆண்டுகால காவிரி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு, குடிமராமத்துத் திட்டம், விவசாய பம்பு செட்டுகளுக்கு 24 மணி நேர மின் சப்ளை, 6 புதிய மாவட்டங்களை உருவாக்கியது, அனைத்து மாவட்டங்களுக்கும் புதிய மருத்துவக் கல்லூரிகள் உட்பட 17 புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை ஆரம்பித்தது, சுமார் 50 லட்சம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினி, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து, தமிழகத்தை தொழில் துறையில் முன்னணி மாநிலமாக மாற்றியது, பெண்கள் பாதுகாப்பாக வாழத் தகுந்த மெட்ரோ நகரங்களில் முதலிடமாக சென்னையை தொடர்ந்து தக்கவைத்தது என்று எங்களது சாதனைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆனால், இந்த நான்கு ஆண்டுகளில் ஸ்டாலின் மாடல் திமுக அரசு இதுபோல் ஒரு சாதனையை குறிப்பிட்டுக் கூற இயலுமா?" என்று விமர்சித்துள்ளார்.

## பிளஸ் 2 தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அன்புமணி வாழ்த்து

சென்னை: மே.9-

12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்: "தமிழ்நாட்டில் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற்று முடிந்த 12ம் வகுப்பு பொதுத் தேர்வுகளின் முடிவுகள் வெளியிடப் பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டைவிட அதிகமாக நடப்பாண்டில் 95.03 விழுக்காடு மாணவ, மாணவிகள் வெற்றி பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

அவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். நல்ல ஆலோசனை பெற்று சிறந்த உயர் கல்வி பயிலும்படி அறிவுறுத்துகிறேன். அதேபோல், 12ம் வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவச் செல்வங்கள், விரைவில் நடைபெறவுள்ள துணைத் தேர்வுகளில் பங்கேற்று வெற்றி பெற வேண்டும் என்று வாழ்த்துகிறேன்" என்று அன்புமணி கூறியுள்ளார்.



# சிங்கம்புணரி அருகே கோயில் திருவிழாவில் மஞ்சுவிரட்டு: 10 பேர் காயம்

சிங்கம்புணரி, மே.09-

சிங்கம்புணரி அருகே கோயில் திருவிழாவை யொட்டி மஞ்சுவிரட்டு நடைபெற்றது. இதில் 10க்கும் மேற்பட்ட வீரர்கள் காயமடைந்தனர். சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி அருகே கட்டுகுடிபட்டி கிராமத்தில் செல்வவிநாயகர் - மகாமாரியம்மன் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் சித்திரை பூச்சொரிதல் விழாவையொட்டி நேற்று மஞ்சுவிரட்டு நடைபெற்றது. இதற்காக கிராம கண்மாய் பகுதியில் வாடிவாசல் அமைக்கப்பட்டது.

மஞ்சுவிரட்டில் கட்டுகுடிபட்டி மற்றும் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட காளைகள் கலந்து கொண்டன. முதலில் கோயில் மாடுகளுக்கு மரியாதை செய்யப்பட்டு அவிழ்த்து விடப்பட்டன. இதையடுத்து மற்ற காளைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவிழ்த்து விடப்பட்டன. வாடிவாசலில் இருந்து சீறிப்பாய்ந்து ஓடிவந்த காளைகளை, மாடுபிடி வீரர்கள் விரட்டி பிடித்து அடக்கினர். மஞ்சுவிரட்டில் 10க்கும் மேற்பட்டோர் சிறிய அளவில் காயமடைந்தனர். இந்த போட்டியை ஏராளமானோர் கண்டுகளித்தனர்.

# விவசாயிகளுக்கு ரூ.1,000 கோடி கடனுதவி: பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தகவல்

சென்னை, மே.09-

தமிழகத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் ரூ.1,000 கோடி வரை விவசாயிகளுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளதாக பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

மாதவரம் பால் பண்ணையில் உள்ள ஆவின் திறன் மேம்பாட்டு மைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆவின் கால்நடை சேவை மையத்தை பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜ் நேற்று திறந்து வைத்தார்.

தொடர்ந்து, பால் உற்பத்தியாளர்கள் கறவைகளுக்கு தேவையான அவசரகால சிகிச்சை உதவிகள் பெற மற்றும் மருத்துவ ஆலோசனை பெற கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் கூடிய 'பாரத் சஞ்சீவனி' செயலியை தொடங்கி வைத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:




பால்வளத்துறை உள்பட அனைத்து துறைகளிலும் திமுக அரசு சரித்திர சாதனைகளை படைத்து வருகிறது. இதன் ஒருபகுதியாக, கால்நடைகளுக்கான சிகிச்சைக்கு மருத்துவர்களை தேடி விவசாய பெருமக்கள் செல்வதை தவிர்த்து, இந்த மையத்தை தொடர்புகொண்டு சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

தரமான பால் கொடுக்கும் விவசாயிகளுக்கு ஒரு சதவீத ஊக்கத் தொகை கொடுக்கப்படுகிறது. குறைந்த வட்டியில் கடன் தொகை வழங்கப்படுகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் சுமார் ரூ.1,000 கோடி வரை விவசாயிகளுக்கு கடன் வழங்கி இருக்கிறோம்.

தமிழக வரலாற்றில் 38 லட்சம் லிட்டர் ஆவின் பால் கொள்முதல் திமுக ஆட்சியில்தான் செய்யப்பட்டது. ஆவின் பெரிய கட்டமைப்பு உள்ள நிறுவனம். லட்சக்கணக்கான பணியாளர்கள் உள்ளார்கள். எந்த சூழலிலும் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது. மக்களுக்கு முறையாக பொருட்கள் சென்றுசேர வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இந்த கால்நடை சேவை மையத்தை '1800 4252 577' என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மாதவரம் சட்டப்பேரவை உறுப்பினர் சுதர்சனம், கால்நடைத்துறை அரசு செயலர் ந.சுப்பையன், ஆவின் நிறுவன மேலாண்மை இயக்குநர் அண்ணாத்துரை உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# திருவள்ளூர் வீரராகவ பெருமாள் கோயிலில் சித்திரை திருத்தேர் திருவிழா: திரளான பக்தர்கள் பங்கேற்பு

திருவள்ளூர், மே.09-

திருவள்ளூர் வீரராகவ பெருமாள்கோயிலில் நடைபெற்று வரும் சித்திரை பிரம்மோற்சவ விழாவின் முக்கிய திருவிழாவான திருத்தேர் திருவிழா இன்று காலை வெகு விமரிசையாக நடைபெற்றது. இதில், திரளான பக்தர்கள் பங்கேற்று, சுவாமி தரிசனம் செய்தனர்.

திருவள்ளூர் வீரராகவ பெருமாள்கோயில், 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. அஹோபில மடத்தின் பராமரிப்பின் கீழ் உள்ள வீரராகவபெருமாள் கோயிலில், சித்திரை பிரம்மோற்சவ விழா கடந்த 2ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. வரும் 11 ம் தேதி வரை நடைபெற உள்ள இந்த பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான திருத்தேர் திருவிழா இன்று காலை வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இவ்விழாவில், வண்ண மலர்கள், வண்ண துணி மற்றும் வாழை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட 60 அடி உயரம், 21 அடி அகலம் கொண்ட திருத்தேரில் அதிகாலை 4.20 மணியளவில், தங்க, வைர ஆபரணங்கள் மற்றும் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட வீரராகவபெருமாள், ஸ்ரீதேவி, பூதேவியுடன் எழுந்தருளினார்.

தொடர்ந்து, காலை 7.30 மணியளவில், திருத்தேர் தேரடியிலிருந்து புறப்பட்டு, குளக்கரை சாலை, பஜார் வீதி, வடக்கு ராஜவீதி, மோதிலால் தெரு வழியாக காலை 9.30 மணியளவில் மீண்டும் தேரடியை வந்தடைந்தது. இதில், திருவள்ளூர், பூந்தமல்லி, திருத்தணி, ஸ்ரீபெரும்புதூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த திரளான பக்தர்கள் பங்கேற்று, திருத்தேர் சக்கரத்தில் உப்பு, மிளகு போட்டு, 'கோவிந்தா... கோவிந்தா.. ' என்று பக்தி முழக்கமிட்டு, சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஊட்டியில் மலர் கண்காட்சி தேதி மாற்றம்: மே 15 துவங்கி 25ம் தேதி வரை 11 நாட்கள் நடக்கிறது

ஊட்டி, மே.09-

ஊட்டியில் மலர் கண்காட்சி முன்னதாகவே துவங்குகிறது. இம்மாதம் 15ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை 11 நாட்கள் மலர் கண்காட்சி நடக்கிறது. ஆண்டு தோறும் கோடை காலத்தில் ஊட்டிக்கு சுற்றுலா பயணிகள் அதிகம் வரும் நிலையில், அவர்களை மகிழ்விக்க தோட்டக்கலைத்துறை சார்பில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. கோத்தகிரியில் காய்கறி கண்காட்சி, ஊட்டியில் ரோஜா கண்காட்சி மற்றும் மலர் கண்காட்சி, குன்னூரில் பழக்கண்காட்சி மற்றும் கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி ஆகியவை நடத்தப்படுகிறது.



இம்முறை புதிதாக குன்னூர் காட்டேரி பூங்காவில் மலை பயிர்கள் கண்காட்சி நடக்கிறது. இதில், மலர் கண்காட்சியே முக்கிய விழாவாக கருதப்படுகிறது. இம்முறை மலர் கண்காட்சி வரும் 16ம் தேதி துவங்கி 21ம் தேதி வரை 6 நாட்கள் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தற்போது இபாஸ் நடைமுறையால் ஒரே சமயத்தில் வர முடியாத நிலையில், சுற்றுலா பயணிகள் வசதிக்காக இம்முறை 15ம் தேதி முதல் 25ம் தேதி வரை 11 நாட்கள் மலர் கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதனால், இம்மாதம் 15ம் தேதி முதல் 25ம் தேதி வரை 11 நாட்கள் ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் அரசு தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சியை கண்டு ரசிக்க வாய்ப்புள்ளது. இதற்காக, தற்போது ஊட்டி அரசு தாவரவியல் பூங்கா தற்போது தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுகுறித்து கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறுகையில், 'தற்போது, ஊட்டி வருவதற்கு இபாஸ் நடைமுறை உள்ளது. இதனால், சுற்றுலா பயணிகள் ஒரே சமயத்தில் வர முடியாத நிலை உள்ளது.

எனவே, ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் வசதிக்காக முன்னதாகவே மலர் கண்காட்சி துவக்கப்படவுள்ளது. அதன்படி, மே 15ம் தேதி துவங்கி 25ம் தேதி வரை 11 நாட்கள் மலர் கண்காட்சி நடத்தப்படவுள்ளது. எனவே, ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் கூட்ட நெரிசலில் மற்றும் வாகன நெரிசலில் சிக்கி தவிக்காமல் எளிதாக மலர் கண்காட்சியை கண்டு ரசித்து செல்ல முடியும். மேலும், நீலகிரி மாவட்டத்தில் இபாஸ் நடைமுறை கல்லார், குஞ்சப்பணை, மேல் கூடலூர், மசினகுடி மற்றும் கெத்தை ஆகிய 5 சோதனைச்சாவடிகளில் கடைபிடிக்கப்பட்டு வருவதால், மாவட்டத்திற்குள் வருகை தரும் அனைத்து சுற்றுலா பயணிகளும் கட்டாயம் இபாஸ் பதிவு செய்து வருகை தர வேண்டும்.

சோதனை சாவடிகளில் உள்ள இபாஸ் சோதனை செய்யும் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். இது தொடர்பாக சுற்றுலா பயணிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில், மாவட்ட எல்லைகளிலும், சோதனை சாவடிகளிலும் விழிப்புணர்வு பதாகைகள் வைக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

* நீலகிரி மாவட்டத்திற்குள் நுழைய 12 மீட்டர் நீளமுள்ள சுற்றுலா பஸ்களுக்கு தடை

கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறுகையில், ''நீதிமன்ற உத்தரவு படி 12 மீட்டர் மற்றும் அதற்கு மேல் (சேசிஸ்) நீளமுள்ள சுற்றுலா வாகனங்கள் மற்றும் கனரக வாகனங்கள் (சுற்றுலா பஸ்கள்) நீலகிரி மாவட்டத்திற்கு வர வட்டார போக்குவரத்து அலுவலகம் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, 12 மீட்டர் நீளமுள்ள பெரிய பஸ்கள் நீலகிரிக்குள் அனுமதிக்கப்படாது. மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.'' என்றார்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு செய்திக்குறிப்பு



நீலகிரி, மே.09-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தண்ணீரு இன்று கூறிய தகவல் வருமாறு : நீலகிரி மாவட்டத்திற்குள் 12 மீட்டர் நீளமுள்ள சுற்றுலா பேருந்துகள் போன்ற வாகனங்கள் நுழைய தடை விதுக்கப்பட்டுள்ளது . இரவு நேரங்களில் சுற்றுலா பேருந்துகளை சாலை ஓரங்களில் நிறுத்தி பயணிகள் தூங்குவதை தவிர்க்க வேண்டும் . காட்டு யானை , புலி சிறுத்தை போன்ற வனவிலங்குகள் நடமாட்டம் உள்ளது. அதனால் பாதுகாப்பு இல்லை . சுற்றுலா பயணிகள் ஓட்டல்கள் மற்றும் ரிசார்ட்களில் தங்கலாம்.

# தமிழகத்தில் 13ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, மே.09-

தமிழகத்தில் ஓரிரு இடங்களில் வரும் 13ம் தேதி வரை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தென்னிந்திய பகுதிகளின்மேல் வளிமண்டல கீழடுக்கில் கிழக்கு மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களில் வரும் 13ம் தேதி வரை இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வெப்பநிலை 81 டிகிரி முதல் 99 டிகிரி ஃபாரன்ஹீட் வரை இருக்கக்கூடும்.

தமிழகத்தில் ஒருசில இடங்களில் 11ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தைவிட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் 11 செ.மீ., திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் 8 செ.மீ., சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு, விழுப்புரம் மாவட்டம் செம்மேடு, கோவை மாவட்டம் சின்னக்கல்லார், விருதுநகர், சாத்தூரில் 7 செ.மீ., விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, மதுரை மாவட்டம் கல்லந்திரி, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் 6 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நூறு நாள் வேலை திட்ட ஊதியம் ரூ.336 ஆக உயர்வு



சென்னை, மே.09-

மத்திய அரசின் அறிவிப்பின்படி தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்துக்கான தினசரி ஊதியம் ரூ.319ஐ ஏப்ரல் 1 முதல் ரூ.336 ஆக உயர்த்தி வழங்க ஊரக வளர்ச்சித் துறை செயலர் உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசின் ஊரக வளர்ச்சித்துறை செயலர் ககன்தீப்சிங் பேடி வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது: மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தில் (100 நாள் வேலை திட்டம்) பயனாளிகளுக்கு வழங்கப்படும் தினசரி ஊதியத்தை 1.4.2025 முதல் ரூ.319லிருந்து ரூ.336 ஆக உயர்த்தி வழங்கும் வகையில் மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்பேரில் தமிழகத்தில் பயனாளிகளுக்கான தினசரி ஊதியத்தை ஏப்ரல் 1 முதல் ரூ.319லிருந்து ரூ.336 ஆக உயர்த்தி வழங்கும் வகையில் உரிய ஆணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி ஆணையர் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதை ஏற்று மகாத்மா காந்தி தேசிய வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் தினசரி ஊதியம் ரூ.319ஐ ஏப்ரல் 1 முதல் ரூ.336 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு அந்த அரணையில் கூறப்பட்டுள்ளது.

# தொழிலாளர்களை தேடி மருத்துவம் மூலம் 3.77 லட்சம் தொழிலாளர்கள் பயன்: சுகாதாரத்துறை தகவல்

சென்னை, மே.09-

தொழிலாளர்களை தேடி மருத்துவம் மூலம் இதுவரை 3.77 லட்சம் தொழிலாளர்கள் பயனடைந்துள்ளதாக சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. பெண்கள், கல்வி, சுகாதாரத்திற்கு முதல்வர் அதிக கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில், ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் பெரிதும் பயனடையும் வகையில் தொடங்கப்பட்டது தான் 'மக்களை தேடி மருத்துவம்' என்ற சிறப்பான திட்டம். நீரிழிவு நோய், ரத்த அழுத்தம், இதய நோய்கள், டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படுவோர் உள்ளிட்ட நோயாளிகளுக்கு, வீடுகளுக்கே நேரடியாகச் சென்று தேவையான மருந்து, மாத்திரைகள், சிகிச்சைகள் வழங்க இந்தியாவிலேயே முதன்முறையாக 'மக்களைத் தேடி மருத்துவம்' என்ற திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் மூலம் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் கோடிக்கணக்கானோர் பயன்பெற்றனர்.



இத்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதை தொடர்ந்து, தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது. இதன் மூலம், மருத்துவ குழுவினர் தொழிற்சாலைகளுக்கே நேரடியாகச் சென்று, தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்கின்றனர். சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்த பாதிப்பு போன்ற நோய் பாதிப்பு கண்டறியப்பட்டால், அவர்களுக்கு தொடர் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர், சேலம், திருச்சி, ராணிப்பேட்டை, திண்டுக்கல், மதுரை ஆகிய 35 மருத்துவ மண்டல ங்கள் உள்ளடக்கிய பகுதிகளில் இருக்கும் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு பரிசோதனைகள் நடைபெறும்.

499 நிறுவனங்களில் இந்த திட்டம் மூலம் பயன்பெற்று உள்ளனர். இதுவரை 3.77 லட்சம் தொழிலாளர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அப்போது தொழிலாளர்களுக்கு ஏதாவது நோய் பாதிப்பு இருந்தால் முதற்கட்ட சிகிச்சை அளித்த பிறகு மேல் சிகிச்சைக்காக அருகில் இருக்கும் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்படுவர். இந்த திட்டம் மூலம் 50 லட்சம் தொழிலாளர்களுக்கு பரிசோதனை செய்ய திட்டமிட்டு இருப்பதாக பொது சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.



# யானை நடமாட்டம்: 3வது நாளாக சுற்றுலா பயணிகள் தொட்டபெட்டா காட்சிமுனை செல்ல தடை

ஊட்டி, மே.09-

வனத்துக்குள் செல்லாமல் யானை தொடர்ந்து தொட்டபெட்டா பகுதியிலேயே நடமாடி வருவதால் மூன்றாம் நாளாக இன்றும் சுற்றுலா பயணிகள் தொட்டபெட்டா காட்சிமுனை செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டம் குன்னூர் மேட்டுப்பாளையம் மலைபாதையில் தற்போது கோடை மழை பெய்ததால் பசுமைக்கு திரும்பியுள்ளது. இதனால் யானைகளுக்கு தேவையான உணவு எளிதில் கிடைப்பதால் சமவெளிப் பகுதிகளில் இருந்து குன்னூர் நோக்கி யானைகள் படையெடுத்து வருகின்றன.

இந்நிலையில், குன்னூர் அருகே உள்ள கரிமரா ஹட்டி மற்றும் பழத்தோட்டம் பகுதியில் ஒற்றை யானை உலா வருகிறது. பகல் நேரத்தில் தேயிலை தோட்டத்தில் சுற்றித்திரிவதால் தேயிலை தோட்டத்திற்கு செல்ல முடியாமல் தொழிலாளர் அவதியடைந்தனர். இந்நிலையில் சிலர் யானையை ட்ரோன் கேமரா மூலம் படம் பிடிப்பதாக கூறி, அதனை தொந்தரவு செய்துள்ளனர். ட்ரோன் கேமரா சத்தம் காரணமாக யானை திசை மாறி தொட்டபெட்டா பகுதிக்கு வந்தடைந்துள்ளது.

மூன்று நாட்களாக இப்பகுதியில் முகாமிட்டுள்ள யானையை விரட்டும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் யானை வனத்துக்குள் செல்லாமல் தொட்டபெட்டா பகுதியிலேயே நடமாடி வருவதால் மூன்றாம் நாளாக இன்றும் சுற்றுலா பயணிகள் தொட்டபெட்டா காட்சிமுனை செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

# டெல்டா பகுதியில் முதன்முறையாக ரெட் சிண்ட்ரோம் பிரச்சனையுடன் வந்த நோயாளிக்கு ஸ்கோலியாசிஸ் அறுவை சிகிச்சை: வெற்றிகரமாக சாதித்துக்காட்டிய தஞ்சையின் மீனாட்சி மருத்துவமனை

தஞ்சாவூர், மே.09-

தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களில் முதன்முறையாக 12 வயது சிறுமி ஒருவருக்கு வளைந்த முதுகுத்தண்டுவடத்தை சரி செய்வதற்கான அறுவை சிகிச்சை வெற்றிகரமாக செய்யப்பட்டுள்ளது. ரெட் சிண்ட்ரோம் என்ற பிரச்சனையுடன் போராடி வந்த அந்த சிறுமிக்கு அறுவை சிகிச்சை செய்ததன் மூலம் தஞ்சையைச் சேர்ந்த மீனாட்சி மருத்துவமனை ஒரு குறிப்பிடத்தக்க மருத்துவ சாதனையையே புரிந்துள்ளது , இதுபோன்ற அதிநவீன அறுவை சிகிச்சை, தமிழகத்தின் டெல்டா பகுதியில் நடந்திருப்பது இதுவே முதன்முறை ஆகும்.

ஸ்கோலியாசிஸ் (Scoliosis) என்பது, அசாதாரணமான நிலையில் முதுகுத்தண்டுவடம் வளைந்த பிரச்சனை அகும். அதேபோல ரெட் சிண்ட்ரோம் (Rett syndrome) என்பது பெண் குழந்தைகளைத் தாக்கும் ஒரு பிரச்சனையாகும். நரம்புக் கோளாறான இது, மூளை வளர்ச்சியைப் பாதிக்கும் தன்மையுடையது. முதுகுத்தண்டுவடம் வளைந்த நிலையில் இருப்பதால் அச்சிறுமிக்குத் தொடர்ச்சியாக வலி இருந்துவந்தது. மூச்சுத்திணறலுடன் நடமாட்டத்திலும் தொந்தரவு இருந்தது. இவை எல்லாவற்றையும் ரெட் சிண்ட்ரோம், தீவிரப்படுத்திக்கொண்டிருந்தது. அது மட்டுமல்லாது, நுரையீரலின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு மூச்சுத்திணறலை அதிகப்படுத்தும் வாய்ப்பும் இருந்துவந்தது.

இந்த வெற்றிகரமான அறுவை சிகிச்சை, முதுகுத்தண்டுவட அறுவை சிகிச்சை நிபுணரான மருத்துவர் எம்.கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது. எலும்பு அறுவை சிகிச்சை நிபுணர்களான மருத்துவர்கள் பார்த்திபன், சண்முகஹரி, பாலகுருநாதன், மயக்கவியல் துறையின் முதுநிலை நிபுணர்களான மருத்துவர்கள் ஜி.அரிமாணிக்கம், வினோதா தேவி ஆகியோரை உள்ளடக்கிய குழுவின் உதவியுடன் இச்சிகிச்சை நடைபெற்றது.

அறுவை சிகிச்சைக்குப் பின்பு நோயாளி பழைய தெம்பைப் பெறவும் நடமாடவும் இம்மருத்துவமனையில் இயன்முறை மருத்துவக் குழு (physiotherapy team) சிறப்பாக செயலாற்றியுள்ளது. தற்போது அச்சிறுமியின் உடலமைப்பு முறையில் நல்ல மாற்றம் விளைந்திருக்கிறது. அதனால் அவரால் எளிதாக நடமாட முடிவதுடன் சுவாசமும் மேம்பட்டிருக்கிறது. ஓராண்டுக்குப் பிறகு, அவர் மிகவும் சிறப்பாக குணமடைந்துவிட்டார்.

இதுகுறித்து தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனையில் தலைவர் மருத்துவர் எஸ். குருசங்கர் பேசுகையில், தற்போதைய அறுவை சிகிச்சையின் மூலமாக, வளைவான முதுகுத் தண்டுவட பிரச்சனை சரி செய்யப்பட்டிருக்கிறது.



அப்பிரச்சனையால் அவருக்கு ஏற்பட்டு வந்த அசௌகரியத்துக்கும் முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. அவரது சுவாசமும்மேம்பட்டிருப்பதுடன்தற்போதுநன்றாகநடமாடவும் முடிகிறது. இந்த சிக்கலான அறுவை சிகிச்சைக்காக நாங்கள் இன்ட்ரோ ஆப்பரேட்டிவ் நியூரோ மானிட்டரிங் எனும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியிருக்கிறோம். அதன் வாயிலாக, அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருக்கும்போது நரம்புகளுக்கு ஏதேனும் சேதாரங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்பதையும் கண்காணிக்க முடிந்திருக்கிறது. ஸ்கோலியாசிஸ் எனப்படும் வளைந்த முதுகு தண்டுவட பிரச்சனை என்பது வழக்கமாக காணப்படுவதுதான் என்றாலும் கிராமப்புறங்களில் விழிப்புணர்வு இல்லாததாலும் போதுமான அளவுக்கு பரிசோதனை முறைகள் இல்லாததாலும் கண்டுகொள்ளப்படாமல் விட்டுவிடப்படுகிறது.

தொடக்க நிலையிலேயே இவற்றைக் கண்டறிந்துவிட்டால் பிரேசஸ் அல்லது முதுகுக்கு ஆதரவான பெல்ட் ஆகியவற்றின் மூலமே பிரச்சனையை சரி செய்துவிட முடியும். அறுவை சிகிச்சை வேண்டியிருக்காது. பிரச்சனை தொடர்பாக சிறிய சந்தேகம் இருந்தாலும்கூட உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற்றால், உரிய நேரத்தில் சிகிச்சை பெற அது ஏதுவாக இருக்கும்'' என்றார்.

முதுநிலை முதுகு தண்டுவட அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் கார்த்திகேயன் இது குறித்துப் பேசுகையில், முதுகுத்தண்டுவடம் தொடர்பான அனைத்து பிரச்சனைகளுக்கும் அறுவை சிகிச்சை மூலமோ அல்லது அறுவை சிகிச்சை இல்லாமலோ குணப்படுத்த இது சிறப்பு வாய்ந்த பிரிவாகும். சிக்கலான முதுகு தண்டுவட அறுவை சிகிச்சைகள்கூட ஒத்த கருத்துடைய குழுக்களை ஒன்றிணைத்து சிறந்த முறையில் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. தற்போதைய அறுவை சிகிச்சையின்பொழுது நோயாளியின் முதுகுத்தண்டுவடத்தில் ஏற்பட்டிருந்த வளைவை, மருத்துவப் பயன்பாட்டுக்கான உலோகத் துண்டு, தனித்துவமான திருகாணிகள் ஆகியவற்றைப் பொருத்தி சரி செய்தோம். இவற்றை மறுபடி எடுக்க வேண்டியதில்லை.

இந்த அறுவை சிகிச்சையை அடுத்து நோயாளிகள் தங்களது தினசரி நடவடிக்கைகளை இயல்பாக (விளையாட்டுக்கள் உட்பட) தொடர்ந்து செய்யலாம். அறுவை சிகிச்சையின்பொழுதே நரம்புகளின் செயல்பாட்டையும் கண்காணிக்க இத்தொழில்நுட்பம் பெரிதும் கைகொடுத்தது. அதன்படி ஒரு சிறிய தடங்கலுக்கான சமிக்ஞை கிடைத்திருந்தாலும்கூட நாங்கள் அறுவை சிகிச்சையை மென்மேலும் தொடராமல் நிறுத்தி இருப்போம். இன்றைக்கு, ஐ.ஓன்.என்.எம், எல்லா முக்கியமான முதுகுத்தண்டுவட அறுவை சிகிச்சைகளுக்கும் பாதுகாப்பையும் துல்லியத்தன்மையையும் உறுதிப்படுத்தும் தவிர்க்க இயலாத தொழில் நுட்பமாகிவிட்டது'' என்றார்.

இப்பத்திரிகையாளர் சந்திப்பின்போது தஞ்சை மீனாட்சி மருத்துவமனையின் துணை மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர்.வி.பிரவீன் உடனிருந்தார்.



# திருவண்ணாமலையில் சித்ரா பவுர்ணமி விழா: தமிழகம் முழுவதும் மே 11, 12ல் 5,932 சிறப்பு பேருந்து இயக்கம்

திருவண்ணாமலை, மே.09-

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு, சென்னை உட்பட பல்வேறு ஊர்களில் இருந்து திருவண்ணாமலைக்கு 5,932 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

இதுகுறித்து அரசு விரைவு போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு பயணிகள் அதிக அளவில் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, சென்னை உட்பட பல்வேறு நகரங்களில் இருந்து வரும் 11, 12, ம் தேதிகளில் வழக்கமாக செல்லும் பேருந்துகளுடன் 5,932 சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து 11ம் தேதி 1,156 பேருந்துகளும், 12ம் தேதி 966 சிறப்பு பேருந்துகளும், மாதவரத்தில் இருந்து 11ம் தேதி 150 பேருந்துகளும், கோயம்பேட்டில் இருந்து 12ம் தேதி 150 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. இதுதவிர, பல்வேறு நகரங்களில் இருந்து திருவண்ணாமலைக்கு 11ம் தேதி 1,940 சிறப்பு பேருந்துகளும், 12ம் தேதி 1,530 சிறப்பு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் சார்பில், இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் 40 சொகுசு பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. சென்னை, மதுரை, சேலம், கோவை, ஈரோடு, திருப்பூர், திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து திருவண்ணாமலைக்கு அரசு பேருந்துகளில் முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்க www.tnstc.in மற்றும் மொபைல் செயலி வாயிலாக முன்பதிவு செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் மின்னுற்பத்தி நிறுவு திறன் 3,267 மெகாவாட் அதிகரிப்பு

சென்னை, மே.09-

தமிழகத்தில் மின்னுற்பத்தி நிறுவு திறன் 3,267 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. தமிழகத்தில் தினசரி மின்தேவை அதிகரித்து வருவதால், அதைப் பூர்த்தி தமிழக மின்வாரியம் தனது மின்னுற்பத்தி திறனை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, அனல், நீர், சூரியசக்தி, எரிவாயு மற்றும் காற்றாலை ஆகியவற்றின் மூலம் மின்னுற்பத்தி நிறுவு திறனை அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் தற்போது அனல்மின் உற்பத்தி நிறுவு திறன் 1,959 மெகாவாட் என்ற அளவில் உள்ளது. இதில் இருந்து 1,709 மெகாவாட் திறன் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது.

இதேபோல், எரிவாயு மூலம் மின்னுற்பத்தி செய்வதற்கான நிறுவு திறன் 1,027 மெகாவாட்டாக உள்ளது. இதில் இருந்து 524 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 503 மெகாவாட் மின்சாரம் தனியார் நிறுவனங்களிடம் இருந்து கிடைக்கிறது.

இதேபோல், காற்றாலை, சூரியசக்தி உள்ளடக்கிய புதுப்பிக்கத்தக்க மின்ஆற்றல் 25,290 மெகாவாட்டாக உள்ளது. இதில், காற்றாலையில் இருந்து 11,739மெகாவாட்டும், சூரியசக்தி மூலம் 10,153 மெகாவாட்டும் மின்னுற்பத்தி செய்யப்படுகிறது.

இவை தவிர, நீர்மின் நிலையம் உள்ளிட்ட பிற மின்னுற்பத்தி நிலையங்கள் மூலம் 2,178 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்நிலையில், தமிழகத்தின் ஒட்டுமொத்த மின்னுற்பத்தி நிறுவு திறன் கடந்த மார்ச் 31ம் தேதி நிலவரப்படி 39,805 மெகாவாட்டில் இருந்து 42,772 மெகாவாட்டாக அதிகரித்துள்ளதாக, மத்திய மின்சார ஆணையம் தெரிவித்துள்ளது.

# சென்னை துறைமுகம், கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை

சென்னை, மே.09-

சென்னை துறைமுகம் மற்றும் கல்பாக்கம் அணு மின்நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது. காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 26 பேர் உயிரிழந்தனர்.



இதையடுத்து, பாகிஸ்தானில் தீவிரவாதிகளின் முகாம்களின் மீது இந்திய ராணுவம் ஏவுகணைகளை வீசி தாக்கி அழித்தது. இதை தொடர்ந்து மத்திய அரசின் அறிவுறுத்தல்படி, தமிழகத்தில் சென்னை துறைமுகம், கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் பாதுகாப்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது.

சென்னை துறைமுகம் தலைமை அலுவலக வளாகத்தில் நேற்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை ஒரு மணி நேரம் உள்நாட்டு பாதுகாப்பு ஒத்திகை நடைபெற்றது. ஒரே நேரத்தில் திடீரென விமான தாக்குதல் நடப்பதை உருவாக்கி, துறைமுகத்தில் இருந்து பொதுமக்கள் எவ்வாறு பாதுகாப்பாக வெளியேறுவது, மீட்பது குறித்து ஒத்திகை நடந்தன.

சென்னை துறைமுக ஆணையம், இந்தியக் கடற்படை, இந்தியக் கடலோரக் காவல்படை, இந்திய விமா னப்படை, தமிழக போலீஸ், தேசிய பேரிடர் மீட்புப் படை, எண்ணெய் கையக ப்படுத்தும் அமைப்புகள், சென்னை மாவட்ட நிர்வாகம் மற்றும் துறைமுக பணியாளர்கள் உட்பட 500க்கும் மேற்பட்டோர் ஈடுபட்டனர்.

ஒத்திகை நிறைவில், சென்னை துறைமுகத்தின் தலைவர் சுனில் பாலிவால் தலைமையில் விளக்கம் கூட்டம் நடந்தது. இதில், துணைத்தலைவர் விஸ்வநாதன், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் சகாதே மற்றும் காவல் துணை ஆணையர் சுந்தரவடிவேல் பங்கேற்றனர்.

சென்னை துறைமுகத்தில் போர் தாக்குதல் நடந்தால் பாதிக்கப்பட்டவர்களை

இதேபோல் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ் தலைமையில் நேற்று ஒத்திகை நடைபெற்றது. இதில், அணுமின் நிலையங்களை ஏதேனும் தாக்குதல்கள் மூலம் பாதிப்பு ஏற்படும்பட்சத்தில், ஊழிய ர்கள் மற்றும் சுற்றுப்புற மக்களை மீட்டு, முதலுதவிகள் அளித்து பாதுகாப்பது குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை படை வீரர்கள் மற்றும் கமாண்டோ பாதுகாப்பு படையினர் ஒத்திகை நடத்திக் காட்டினர்.







# மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் கோலாகலம்: பக்தர்கள் பரவசம்

மதுரை, மே.09-

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் சித்திரைத் திருவிழாவின் பத்தாம் நாளான இன்று (மே.8) காலையில் மீனாட்சி சுந்தரேசுவரருக்கு திருக்கல்யாணம் காலை 8.51 மணியளவில் நடைபெற்றது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர். திருமணமான பெண்கள் புதுத்தாலி அணிந்து கொண்டனர்.

உலகப் புகழ்பெற்ற மதுரை மீனாட்சி சுந்தரே சுவரர் கோயிலின் சித்தி ரைத் திருவிழா ஏப்.29ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி மே 10ம் தேதி வரை நடைபெறுகிறது. திருவிழா நாட்களில் காலை, மாலையிலும் சுவாமி அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருள்கின்றனர்.

முக்கிய விழாக்களான மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகம் எட்டாம் நாளான மே 6ம் தேதி இரவு 7.35 மணியளவில் நடைபெற்றது. மீனாட்சி அம்மன் வைரராயர் கிரீடம், நவரத்தின செங்கோலுடன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஒன்பதாம் நாளான நேற்று (மே 7) மீனாட்சி அம்மனுக்கு திக்கு விஜயம் நடைபெற்றது. பத்தாம் நாளான இன்று (மே 8) காலை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் நடைபெற்றது. அதற்கு முன்பாக அதிகாலை 4 மணியளவில் வெள்ளி சிம்மாசனத்தில் மீனாட்சி அம்மன் பிரியாவிடை சுந்தரேசுவரர் நான்கு மாசி வீதிகளில் எழுந்தருளினர். திருப்பரங்குன்றம் முருகன் கோயிலிலிருந்து புறப்பட்ட சுப்பிரமணிய சுவாமி தெய்வானை, பவளக்கனிவாய் பெருமாள் ஆகியோர் கோயிலை வந்தடைந்தனர்.

கோயில் வளாகத்தில் ஆடி வீதியில் நடைபெறும் திருக்கல்யாண மேடை 10 டன் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அதனையொட்டி திருக்கல்யாண மேடைக்கு திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி, தெய் வானை காலை 7.55 மணிக்கு மேடையில் எழுந்தருளினர். பிரியாவிடையுடன் சுந்தரேசுவரர் காலை 7.58 மணிக்கு எழுந்தருளினர்.

அதனைத்தொடர்ந்து மீனாட்சி அம்மன் 8.04 மணியளவில் மேடையில் எழுந்தருளினர். பவளக்கனிவாய் பெருமாள் காலை 8.06 மணியளவில் மேடையில் எழுந்தருளினார். பின்னர் காலை 8.13 மணியளவில் விநாயகர் பூஜையுடன் மங்கல வாத்தியங்கள் முழங்க விநாயகர் பூஜையுடன் திருக்கல் யாணம் தொடங்கியது.சிவாச்சாரியார்கள் வேதமந் திரங்கள் முழங்க பூஜைகள் செய்தனர். பூஜைக்கு பின்பு 8.41க்கு காப்பு கட்டப்பட்டது. காலை 8.43 மணியளவில் தாரைவார்க்கும் வைபவம் நடைபெற்றது. காலை 8.45 மணியளவில் மாலைகள் மாற்றும் வைபவம் நடந்தது. கோயில் நிர்வாகம் சார்பில் சுவாமி, அம்மனுக்கு பட்டு வஸ்திரம் சாற்றப்பட்டது. காலை 8.51க்கு திக்கல்யாணம் நடைபெற்றது.பின்பு தீப, தூப ஆராதனைகள் நடைபெற்றது. அப்போது திருமணமான பெண்கள் புதுத்தாலியை அணிந்து கொண்டனர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று தரிசனம் செய்தனர்.

அதனைத்தொடர்ந்து சிகர நிகழ்ச்சியான தேரோட்டம் மே 9 காலை 6.30 மணிக்கு திருத்தேரோட்டம் நடைபெறும். 12ம் நாள் (மே 10) தீர்த்த பூஜையுடன் திருவிழா நிறைவுபெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், இணை ஆணையர் ச.கிருஷ்ணன், அறங்காவலர்கள், பணியாளர்கள் செய்து வருகின்றனர்.



■ சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புதுவயல் வித்யா கிரி மெட்ரிக் பள்ளி மாணவர்கள் +2 பொதுத்தேர்வில் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர்.முகம்மது தவ்பிகா587, ஹரி ஸ்ரீனிவாஸ் 583, காவியா பாலா578 மதிப்பெண் பெற்றுள்ளனர்.மாணவர்களை பள்ளி குழுத் தலைவர் கிருஷ்ணன், தாளாளர் சுவாமிநாதன், பொருளாளர் ஹாஜி முகமது மீரா, வித்யா கிரி கல்வி நிறுவனங்களின் முதன்மை நிர்வாக அதிகாரி ஐஸ்வர்யா சரண் சுந்தர் ஆகியோர் மாணவர்களின் நேரில் அழைத்து பாராட்டினார்.



■ சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் கிளாதரி கிராமத்தில் காதணி விழாவிற்கு சேர்த்து வைத்த பணம் கரையான் அரித்தது செய்தி வெளியானது பாதிக்கப்பட்ட குமார் முத்துகருப்பி தம்பதிக்கு நடிகர் லாரன்ஸ் ரூ1 லட்சம் தம்பதிகளுக்கு நேற்று வழங்கினார்..




## நெய்க்காரப்பட்டி பி ஆர் ஜி பள்ளியில் படித்த மாணவன் அறிவியல் பாடப் பிரிவில் மாநிலத்தில் முதலிடம்

பழனி, மே.09-

பழனி அருகே உள்ள நெய்க்காரபட்டியில் உள்ள பி ஆர் ஜி மெட்ரிக்குலேஷன் தனியார் பள்ளியில் பன்னிரெண்டாம் வகுப்பு படித்த மாணவர் பெ.ஹரிபிரசாத். இவரது தந்தை பெரியசாமி, தாய் ருக்மணி. விழசாயியான இவரது மகன் ஹரி பிரசாத் அறிவியல் பாடப்பிரிவில் 600க்கு 597 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் முதலிடம் பிடித்துள்ளார். அறிவியல் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்கள் எடுத்து தமிழகத்திலேயே முதலிடம் பிடித்து பெருமை சேர்த்துள்ளார். மாணவர் ஹரி பிரசாத்தை பெற்றொர், பள்ளி நிர்வாகிகள் மற்றும் சக மாணவர்கள் பாராட்டி வருகின்றனர்.




## பெரியகுளம் அருகே ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயா பட்டமளிப்பு விழா

பெரியகுளம், மே.09-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே லட்சுமிபுரம் வி .எல். கிருஷ்ணசாமி ருக்மணி அம்மாள் திருமண மண்டபத்தில் ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயா சார்பில் 33 ஆம் ஆண்டு ஜோதிட பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த பட்டமளிப்பு விழாவிற்கு, தேனி மைய வித்யாபதி பெருமாள் வரவேற்புரை ஆற்றினார். மதுரை மைய வித்யாபதி தமிழன், கோயம்புத்தூர் மைய வித்யாபதி கிருஷ்ணமூர்த்தி, சேலம் மைய வித்யாபதி பொன் சரவணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயம் நிறுவனர் மீனம் கே. எஸ். மணி பட்டாச்சாரியார் விழா பேருரை ஆற்றினார். ஜோதிட படிப்பினை முடித்தவ ர்களுக்கு பட்டங்கள் வழங்க ப்பட்டன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஜோதிட மாணவர்கள், ஜோதிட அன்பர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கை, வியான்னி மறைப்பணி மையத்தில், தமிழ்நாடு செசீலியா பாடகர் குழு (TNCCA) என்ற பதிவு பெற்ற அமைப்பின், பத்தாவது ஆண்டு பொதுக்குழு கூட்டம்

சிவகங்கை, மே.09-

சிவகங்கை, வியான்னி மறைப்பணி மையத்தில், தமிழ்நாடு செசீலியா பாடகர் குழு (ஜிழிசிசிகி) என்ற பதிவு பெற்ற அமைப்பின், பத்தாவது ஆண்டு பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது.





சிவகங்கை மறை மாவட்ட ஆயர் மேதகு முனைவர். லூர்து ஆனந்தம் தலைமையில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

பத்தாவது பொதுக்குழு கூட்டத்தின் நிறைவு நிகழ்வாக மேதகு ஆயர் முனைவர் லூர்து ஆனந்தம் அவர்கள் தலைமையில், சிவகங்கை மறை மாவட்ட முதன்மை குரு பேரருள் அருள் ஜோசப், வியாழன் நீ மறைப்பணி மைய இயக்குனர் செபாஸ்டின், சிவகங்கை மறைவட்ட அதிபர் மற்றும் அலங்கார அன்னை பேராலய பங்குத்தந்தை, ஜேசுராஜா, சிவகங்கை இளையோர் பணிக்குழுச் செயலாளர் அருள்பணி. பினோட்டன், சிவகங்கை அலங்கார அன்னை பேராலய உதவி பங்குத் தத்தை, அருட்பணி. கிளின்டன், அருட்பணி அமல்ராஜ், ஆகியோர் சிறப்பு திருப்பலி நிறைவேற்றினர்.

பெதுச்செயலாளர் ஆண்டறிக்கை வாசித்தார். வருடாந்திர வரவு செலவு கணக்குகள் பொருளாளரால் வாசிக்க ப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சிறப்பு நிகழ்வாக இறை இசைப் பணியில் தங்களை பல ஆண்டுகளாக ஈடுபடுத்திக் கொண்டு திருஅவை நிகழ்வுகளில் சிறப்பிக்கும் பாடகர் குழுவினரை உற்சாகப்படுத்திய அருட்பணி சாமு இதயன், அருட்பணி. பிரபாகரன் அருட்பணி. குழந்தைசாமி அருட்பணி. செங்கோல் வேதமாணிக்கம் அருட்பணி. சி. ஏ. ஜேம்ஸ் அருட்பணி. பாக்கியநாதன் அருள்ச கோதரி. ஜோஸ்பின், அருள் சகோதரி. சார்லஸ், வேதியர் பேசில், துரை மரிய சூசை, ஆசிரியர் சதானந்தம், ஆசிரியர் மனுவேல், செல்வி. குளோரி இசையமைப்பாளர் தேவா ஆகியோருக்கு, வாழ்நாள் சாதனையாளர் விருது ஆயர் அவர்களால் வழங்கப்பட்டது.

பத்தாவது பொதுக்குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகளை, தமிழ்நாடு செசீலியா பாடகர் குழு அமைப்பின், ஆன்மீக ஆலோசகர், அருட்தந்தை. மைக்கேல் மரிய தாஸ் அவர்கள் தலைமையில், நிறுவனத் தலைவர் ஆனந்த கீதன், பொதுச் செயலாளர் சுந்தர், பொருளாளர் மார்ட்டீன் ராஜ், உதவி தலைவர் ஆவே கண்ணன், இணைச் செயலர் ராஜா, மற்றும் சிவகங்கை மண்டல தலைவர் சேவியர் ராஜப்பா, செயற்குழு செயற்குழு உறுப்பினர்கள் நவநேசன், வின்சென்ட், அன்பு தாசன் , சிவகங்கை மாவட்ட செயலாளர் மார்க் ஆண்டனி, சிவகங்கை மாவட்ட இணைச் செயலாளர் சதீஷ் பிரான்சிஸ் ராஜ் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.




■ பரமக்குடி சௌராஷ்டிரா பிராமண மகாஜனங்களுக்கு சொந்தமான ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் தேவஸ்தானத்தை சேர்ந்த ஸ்ரீ விசாலாட்சி அம்பிகா சமேத ஸ்ரீ சந்திரசேகர் சுவாமி ஆலயத்தில் சித்திரைத் திருவிழா எட்டாம் நாள் நிகழ்ச்சியாக விசாலாட்சி அம்பிகா தபசு கோலத்தில் நகர்வலம் வந்து பக்தர்களுக்கு காட்சியளித்தார்



## அமைச்சர் பெரியகருப்பனை வரவேற்ற டிஎஸ்பி ஆத்மநாதன்

சிவகங்கை, மே.09-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி பிஎல்பி பேலஸில் நடைபெற்ற டிஎஸ்பி ஆத்மநாதன் பணி நிறைவு பாராட்டு விழாவில் கலந்துகொண்டு வாழ்த்த வருகை தந்த தமிழ்நாடு அரசின் கூட்டுறவு துறை அமைச்சர் மற்றும் சிவகங்கை திமுக மாவட்ட செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பனுக்கு மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் ஆத்மநாதன் கதர் ஆடை அணிவித்து வரவேற்றார் .உடன் முன்னாள் அமைச்சர் முகவை தென்னவன், தொழிலதிபர் பள்ளத்தூர் பி எல் படிக்காசு, சேங்கைமாறன், பள்ளத்தூர் ரவி, மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பிரான்சிஸ், காரைக்குடி துணைக் காவல் கண்காணிப்பாளர் பார்த்திபன், மற்றும் அனைத்து துணை காவல் கண்காணிப்பாளர், ஆய்வாளர்கள், சார்பு ஆய்வாளர்கள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



## காரைக்குடி மகாரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 100% தேர்ச்சி

சிவகங்கை, மே.09-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மகாரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் 100% தேர்ச்சி பெற்றுள்ளனர். பிரதீவ் 594, சஞ்சய்592, ராஜஸ்ரீ589, சத்தியமூர்த்தி 587, விஷ்வா585, சர்கேஷ்585 மதிப்பெண்களை பெற்றனர் மாணவர்களை பள்ளி நிர்வாகம் மற்றும் ஆசிரியர்கள் நேரில் அழைத்து பாராட்டினார்



## செங்கல்பட்டு வடக்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சி சார்பாக மாவட்ட தலைவர் சிங்கை ந. ரகுராமன் அறிவுறுத்தலின்படி தண்ணீர் பந்தல் திறப்பு விழா

தாம்பரம், மே.09-

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட இரும்புலியூர் பீர்க்கங்காரணை மண்டல் சார்பில் மாவட்ட செயலாளர் அமைப்புசாரா தி.சிவகலை அவர்கள் ஏற்பாட்டில் காந்தி ரோடு முடிச்சூர் ரோடு ஜங்ஷன் டொமினோஸ் பிஸ்சா எதிரில் அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக இரும்புலியூர் பீர்க்கங்காரணை நகர தலைவர் ந.ஆனந்தகுமார் கலந்து கொண்டு தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு மோர், ரோஸ் மில், பாதாம் உள்ளிட்டவை பொது மக்களுக்கு வழங்கி னார்கள் இந்த நிகழ்ச்சியை பாரதிய ஜனதா கட்சி மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மண்டல நிர்வாகிகள் உறுப்பினர்கள். நமோ ஆட்டோ சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்களுக்கு ஜூன் 25ம் தேதி முதல் துணைத்தேர்வு நடைபெறும் என அறிவிப்பு

சென்னை, மே.09-

12ம் வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணை தேர்வுக்கு மே 14 முதல் 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் அறிவித்துள்ளது. பிளஸ் 2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 3ம் தேதி தொடங்கி, 25ம் தேதியுடன் நிறைவு பெற்றது. இந்த தேர்வை பள்ளிகளில் இருந்து 3 லட்சத்து 78 ஆயிரத்து 545 மாணவர்களும், 4 லட்சத்து 24 ஆயிரத்து 23 மாணவிகளும், தனித்தேர்வர்களாக 18 ஆயிரத்து 344 பேரும், சிறைவாசிகள் 145 பேரும் என மொத்தம் 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 பேர் எழுதினார்கள். இந்த தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டுள்ளன. இதில் தமிழ் பாடத்தில் 135 பேர் 100 க்கும் 100 மதிப்பெண்கள் பெற்று அசத்தியுள்ளனர்.

அதேநேரம் அதிக தேர்ச்சி பெற்ற மாவட்டமாக அரியலூர் முதலிடத்தில் உள்ளது. 98.2% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இரண்டு, மூன்று இடங்களில் ஈரோடு, திருப்பூர் உள்ளது. இந்நிலையில் பிளஸ் 2 பொதுத்தேர்வில் தோல்வியடைந்தவர்கள், வருகைப்புரியாத தேர்வர்கள், தனித்தேர்வர்களுக்கான துணைத் தேர்வுகளுக்கு ஜூன் 25ம் தேதி முதல் துணைத்தேர்வுகள் தொடங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. துணைத் தேர்வுகளுக்கான கால அட்டவணை மே 9ம் தேதி வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறாத மாணவர்கள் துணை தேர்வுக்கு மே 14 முதல் 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். +2 மதிப்பெண் பட்டியலை தேர்வுத்துறை இணைய தளத்தில் இருந்து வரும் 12ம் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விடைத்தாள் நகல் கேட்டு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் வரும் 13 முதல் 17 தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

## ரூ.12 ஆயிரம் கோடியில் 5 ஐஐடிகள் விரிவாக்கம்: ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல்

சென்னை, மே.09-

ஆந்திரா, கேரளா, சட்டீஸ்கர், ஜம்மு காஷ்மீர், கர்நாடகாவில் அமைக்கப்பட்ட ஐந்து புதிய ஐஐடிகளின் கல்வி மற்றும் உள்கட்டமைப்பு திறனை விரிவுபடுத்துவதற்கு பிரதமர் மோடி தலைமையில் நடந்த ஒன்றிய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்தது. 2025-26 முதல் 202829 வரையிலான நான்கு ஆண்டுகளில் முன்மொழியப்பட்ட விரிவாக்கத்திற்கான மொத்த செலவு ரூ.11,828.79 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஐஐடிகளில் 130 பேராசிரியர் பதவிகளை உருவாக்கவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஐஐடிகள் ஆந்திராவின் திருப்பதி, கேரளாவின் பாலக்காடு, சத்தீஸ்கரில் பிலாய், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் ஜம்மு, கர்நாடகாவின் தார்வாட் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

ஐடிஐ மேம்பாட்டிற்கான ரூ.60,000 கோடி: இந்தியாவின் தொழிற்கல்வியை மாற்றுவதற்காக ரூ.60,000 கோடி செலவில் ஐந்து தேசிய திறன் மேம்பாட்டு மையங்களை மேம்படுத்துவதற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் 20 லட்சம் இளைஞர்கள் திறன் பெறுவார்கள்.இந்தத் திட்டத்தின் கீழ் புவனேஸ்வர், சென்னை, ஐதராபாத், கான்பூர், லூதியானா ஆகிய ஐந்து என்எஸ்டிஐகளில் உள்கட்டமைப்பு மேம்படுத்தல் மேற்கொள்ளப்படும். கூடுதலாக, 50,000 பயிற்சியாளர்களுக்கு முன் சேவை மற்றும் சேவையில் பயிற்சி வழங்கப்படும்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161